ෆැක්ස් අංකය
தொலைநகல் } 2323730
Fax No.

ඊ-මේල්
மின்னஞ்சல் } cabsecsl@sltnet.lk
E-mail

වෙබ් අඩවිය
வெப் தளம் } www.CabinetOffice.gov.lk
Web Site

# අමාත්‍ය මණ්ඩල කාර්යාලය
# அமைச்சரவை அலுவலகம்
# OFFICE OF THE CABINET OF MINISTERS

ජනරජ චතුරශ්‍රය, ශ්‍රීමත් බාරොන් ජයතිලක මාවත, කොළඹ 01.
குடியரசுச் சதுக்கம், சேர் பாரோன் ஜயதிலக்க மாவத்தை, கொழும்பு 01.
Republic Square, Sir Baron Jayathilaka Mawatha, Colombo 01.

මගේ අංකය
எனது இல. } 
My No.

ඔබේ අංකය
உமது இல. }
Your No.

## அமைச்சரவை விஞ்ஞாபனம்

### ஓர் இடைக்கால நடவடிக்கையாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினதும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினதும் பணிகள் அமைச்சரவையினால் கையாளப்படுதல்

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினாலும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினாலும் கையாளப்பட்ட பணிகள் இந்த ஆணைக்குழுக்கள் மீளமைப்புச் செய்யப்படும் வரைக்கும் அமைச்சரவையினால் முழுமையாக ஓர் இடைக்கால நடவடிக்கையாக கையாளப்பட வேண்டுமென 2009 மே மாதம் 06 ஆம் திகதி நடாத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது. இதற்கமைவாக, இந்த ஆணைக்குழுக்களின் நோக்கெல்லைக்குட்பட்ட விடயங்களை கையாளுவதற்கான இடைக்கால நடவடிக்கைகள் தொடர்பிலான வழிகாட்டல்கள் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் அமைச்சுக்களின் செயலாளர்கள் அனைவருக்கும் 2009.06.25 ஆம் திகதியன்று அமைச்சரவைச் செயலாளரினாலும் 2009.11.11 ஆம் திகதியிடப்பட்ட திருத்தப்பட்ட வழிகாட்டல்களினாலும் தெரிவிக்கப்பட்டது.

02. இதற்கமைவாக அரசியலமைப்பின் பதினேழாவது திருத்தத்தின் 55(1) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் கையாளப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் தொடர்பிலான விடயங்கள் இக்காலப் பகுதியில் அமைச்சரவையினால் கையாளப்பட்டன. 2010.09.09 ஆம் திகதியன்று அரசியலமைப்பிற்குச் செய்யப்பட்ட பதினெட்டாவது திருத்தம் பிரகடனப்படுத்தப்பட்டதன் பின்னரும்கூட 2011.05.13 ஆம் திகதியன்று அரசாங்க சேவை ஆணைக்குழுவானது நியமிக்கப்படும் வரைக்கும் திருத்தப்பட்ட அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப இந்த நடைமுறை தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. அரசியலமைப்பின் பதினேழாவது திருத்தத்தின் 55(3) ஆம் உறுப்புரையின் கீழ் உள்ள திணைக்களங்களின் தலைவர்கள் அனைவரினதும் விடயங்கள் தொடர்பில் அரசியலமைப்பின் 55(4) ஆம் உறுப்புரையின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்கள் தொடர்பிலான சகல கொள்கைத் தீர்மானங்களையும் கையாளுவதுடன் கூடுதலாக மேற்போந்த பணிகளையும் அமைச்சரவை புரிந்துகொண்டிருந்தது.



ලේකම්
செயலாளர் } 2329620
Secretary

අතිරේක ලේකම්
மேலதிகச் செயலாளர் } 2325279
Additional Secretary

ප්‍රධාන ලිපිකරු
பிரதம இலிகிதர் } 2422438
Chief Clerk

03. மேற்போந்த 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை கையாளுவதில் அமைச்சரவைக்கான சிபாரிசுகளை சமர்ப்பித்தல் பணியானது மாண்புமிகு (கலாநிதி) சரத் அமுனுகமவின் (அப்போதைய தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு அமைச்சர்) தலைமைத்துவத்தின் கீழ் உறுப்பினர்களாக நான்கு (04) பிற அமைச்சர்களையும் கொண்டதாக 2007.02.07 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட அமைச்சரவையின் கூட்டத்தில் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட தாபன விடயங்கள் பற்றிய அமைச்சரவை உபகுழுவுக்கு பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. 2010.05.12 ஆம் திகதியன்று எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் நியதிகளின் பிரகாரம் தாபன விடயங்கள் பற்றிய அமைச்சரவை உபகுழுவானது ஏனைய எட்டு (08) அமைச்சர்களை கொண்டதாக எனது தலைமைத்துவத்தின் கீழ் பணியாற்றியுள்ளது. அதன் பின்னர் இந்த அமைச்சரவை உபகுழுவானது நல்லாட்சி மற்றும் உட்கட்டமைப்பு பற்றிய (சிரேட்ட) அமைச்சராகிய மாண்புமிகு ரத்னசிறி விக்ரமநாயக்கவின் தலைமைத்துவத்தின் கீழ், ஏனைய இரண்டு (02) சிரேட்ட அமைச்சர்களுடனும் எட்டு (08) அமைச்சர்களுடனும் 2010.11.22 ஆம் திகதி தொடக்கம் செயல்வலுவுக்கு வரத்தக்கதாக பணியாற்றியுள்ளது.

04. அமைச்சரவைச் செயலாளரையும் அமைச்சரவை அலுவலகத்தின் சிரேட்ட உத்தியோகத்தர்களையும் பொதுநிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரையும், தாபனப் பணிப்பாளர் அதிபதியையும் அவர்களுடன் சேர்த்து அந்த அமைச்சின் நான்கு (04) சிரேட்ட உத்தியோகத்தர்களையும் நிதி, திட்டமிடல் அமைச்சின் மூன்று (03) சிரேட்ட உத்தியோகத்தர்களுடன் திறைசேரிப் பிரதிச் செயலாளரையும் கொண்ட உத்தியோகத்தர்கள் குழுவொன்று அமைச்சர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரிப்புகள் மீது தங்களுடைய கருத்துக்களை தெரிவித்ததன் மூலம் இந்த அமைச்சரவை உபகுழுவுக்கு உதவி புரிந்துள்ளது.

05. அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் நியதிகளின் பிரகாரம் அப்போதைய அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட பணிகளை புரிவதில் இந்த ஆணைக்குழுவிற்கு செயலாளரையும் மேலதிக செயலாளரையும் சிரேட்ட உதவிச் செயலாளர்களையும் உப நிலை பதவியினர்களில் ஏறக்குறைய 125 உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கி இந்த ஆணைக்குழுவின் தலைவரினாலும் ஒன்பது (09) முழுநேர உறுப்பினர்களினாலும் 25 பதவிநிலை உத்தியோகத்தர்களினாலும் உதவி வழங்கப்பட்டது. **எனினும் அமைச்சரவை அலுவலகமானது இந்த வேலையை கையாளுவதற்கு மேலதிக பதவியினர்களை உடையதாகவிருக்கவில்லையென்பதுடன் இப்பணிகள் அமைச்சரவை அலுவலகத்தில் உள்ள தற்போதைய பதவியினர்களினால் கிழமை நாட்களில் வழக்கமான அலுவலக நேரங்களுக்கு வெளியேயும் வார இறுதி நாட்களிலும் விடுமுறை நாட்களிலும் அவர்கள் பணிபுரிந்ததன் மூலம் நிறைவேற்றப்பட்டன.**

06. **அப்போதைய அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பதவி வகிக்கும் காலப்பகுதி முடிவடைந்த திகதி தொடக்கம் 2011.05.13 ஆம் திகதியன்று புதிய அரசாங்க சேவை ஆணைக்குழு நியமிக்கப்படும் வரைக்கும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் கையாளப்படவுள்ள 2,418 கோரிக்கைகள் பெறப்பட்டன. இவற்றில் 2,302 கோரிக்கைகள் தாபன விடயங்கள் பற்றிய அமைச்சரவை உபகுழுவின் சிபாரிசுகளின் மீது அமைச்சரவையினால் கையாளப்பட்டன.** இத்துடன் கூடுதலாக இக்காலப் பகுதியில் அமைச்சரவையினாலேயே முழுமையாக கையாளப்பட வேண்டியனவாகவிருந்த அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் நியதிகளின் பிரகாரம் பெறப்பட்ட 663 கோரிக்கைகளில் 653 கோரிக்கைகள் கையாளப்பட்டன. (மேலும் விபரங்களுக்கு "1 ஆம் இணைப்பைப் பார்க்கவும்.) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விடயங்கள் தொடர்பில் அமைச்சரவைக்கு அனுப்பப்பட்ட 116 பிரேரிப்புக்கள் மீது பிரதானமாக அந்த விடயங்களின் சிக்கல் காரணமாகவும் அமைச்சரவை அலுவலகத்தினால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளைப் பின்பற்றி தேவைப்படும் தகவல்கள் வழங்கப்படாமையினாலும் ஆழமான ஆய்வுகளைச் செய்வதற்கு நேர நெருக்கடி நிலவியமை காரணமாகவும் தீர்மானங்களை வழங்க முடியவில்லை.

07. தாபன விடயங்கள் பற்றிய அமைச்சரவை உபகுழுவானது தாபன விடயங்கள் மீது கிரமமாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட கோரிக்கைகள் மீது பொருத்தமான சிபாரிசுகளை செய்துள்ள அதேவேளையில் அரசாங்க சேவையில் உள்ள பல்வேறு துறைகளின் தொடர்பிலான விடயங்கள் மீது, காலத்திற்குக் காலம் கோட்பாட்டளவில் பல சிபாரிசுகளைச் செய்துள்ளது.

08. கடந்த இரண்டு (02) ஆண்டுக் காலப்பகுதியில் தாபன விடயங்கள் பற்றிய அமைச்சரவை உபகுழுவின் தலைவரும் உறுப்பினர்களும் மேற்போந்த ஆணைக்குழுக்களினால் கையாளப்பட வேண்டியனவாகவிருந்த கடமைகளை நிறைவேற்றுவதில் தங்களுடைய பெறுமதி வாய்ந்த காலப்பகுதியை ஈடுபடுத்த வேண்டியிருந்தது. மேற்போந்த 04 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களும் 05 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிநிலை உத்தியோகத்தர்களும் வழக்கமான அலுவலக நேரங்களுக்கு வெளியேயும் வார இறுதி நாட்களிலும் களையாமலும் ஈடுபாட்டுடனும் பணியாற்றி அமைச்சரவை உபகுழுவுக்கு உதவி புரிந்துள்ளமையை விசேடமாக குறிப்பிட வேண்டியுள்ளது.

09. இந்த விடயங்கள் தொடர்பில் அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானமொன்றுக்கு எதிராக நீதிமன்றமொன்றில் பாதிப்படைந்த எத் தரப்பினரினாலும் மேன்முறையீடு எதுவும் செய்யப்படவில்லையென்பது அந்த விடயங்கள் திருப்திகரமாக கையாளப்பட்டுள்ளன என்பதை போதிய அளவில் சான்றுப்படுத்துகின்றது.

10. 2011 மே மாதம் 13 ஆம் திகதி தொடக்கம் செயல்வலுவுக்கு வரத்தக்கதாக நிறுவப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவானது 2011 மே மாதம் 19 ஆம் திகதி தொடக்கம் செயல்வலுவுக்கு வரத்தக்கதாக பணியாற்றத் தொடங்கியுள்ளதன் நிமித்தம் பின்வருவன அமைச்சரவையின் தகவல்களுக்காகச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

(அ) அரசியலமைப்பின் பதினெட்டாவது திருத்தத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் கையாளப்படவுள்ள விடயங்கள் தொடர்பிலான கோரிக்கைகளை இதன் பின்னர் அமைச்சுக்களின் சகல செயலாளர்களும் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்புமாறு கோரப்படுகின்றனர்; அத்துடன்

(ஆ) அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டவைகளும் ஆனால் இன்னும் முடிவுறாதவைகளுமான கோரிக்கைகள் பற்றி இயைபுள்ள அமைச்சுக்கள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுடன் சேர்ந்து நடவடிக்கை எடுப்பதன் பொருட்டு அவை அந்த அமைச்சுக்களின் செயலாளர்களுக்குச் திருப்பி அனுப்பப்பட வேண்டுமெனவும் கோரப்படுகின்றது.

**மஹிந்த ராஜபக்ஷ**
**சனாதிபதி**
31.05.2011.

இணைப்பு 1

## அரசியலமைப்பின் பிரகாரம் அமைச்சரவையினால் புரியப்படுவதற்காகவும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ காலம் முடிவடைந்ததன் காரணமாக அமைச்சரவையினால் புரியப்படுவதற்காகவும் கிடைக்கப்பெற்ற பிரேரிப்புக்கள் தொடர்பிலான பகுப்பாய்வு

| காலம் | நடாத்தப்பட்ட அமைச்சரவை உபகுழுக் கூட்டங்களின் எண்ணிக்கை | அரசியலமைப்பின் பிரகாரம் அமைச்சரவையினால் கையாளப்படுவதற்காக கிடைக்கப்பெற்ற பிரேரிப்புக்களின் எண்ணிக்கை | அரசியலமைப்பின் பிரகாரம் அமைச்சரவையினால் தீர்மானங்கள் எடுக்கப்பட்ட பிரேரிப்புக்களின் எண்ணிக்கை | அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ காலம் முடிவடைந்தன் காரணமாக அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரிப்புக்களின் எண்ணிக்கை | அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ காலம் முடிவடைந்தன் காரணமாக அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரிப்புக்களில் இருந்து தீர்மானம் எடுக்கப்பட்டவைகளின் எண்ணிக்கை | 2011.05.13 ஆம் திகதியன்றுக்கு மீதியாய் உள்ள பிரேரிப்புகளின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | அமைச்சரவைக்கு ஏற்புடையதான | அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு ஏற்புடையதான |
| 2009.05.13 ஆம் திகதியிலிருந்து 2009.12.31 ஆம் திகதி வரை | 30 | 325 | 325 | 658 | 658 | - | - |
| 2010.01.01 ஆம் திகதியிலிருந்து 2010.12.31 ஆம் திகதி வரை | 34 | 206 | 204 | 1.182 | 1,141 | 02 | 41 |
| 2011.01.01 ஆம் திகதியிலிருந்து 2011.05.13 ஆம் திகதி வரை | 15 | 132 | 124 | 578 | 503 | 08 | 75 |
| **மொத்தம்** | **79** | **663** | **653** | **2.418** | **2,302** | **10** | **116** |